**அசல் வழக்கு எண். 22/2021 தேதி–10.09.2025**

**வா.சா. 2 – குமார்**

**<u>1 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கின் விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கின் பரிகாரம் தெரியுமா என்றால் தெரியும். நடுப்பண்னை கோவிலை சேர்ந்த 30 தலைகட்டுக்கும் மேற்படி கோவிலில் சாமி கும்பிடுவதை பெரிய பண்னை மற்றும் சின்ன பண்னையை சேர்ந்தவர்கள் தடுப்பதால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள விவரங்கள் பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நான் எந்த உரிமையின் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1979ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை மேற்படி நடுப்பண்னை கோவிலை நாங்கள் பராமரித்து வழிபாடு செய்து வந்தோம்.

2. அதன் அடிப்படையில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி விவரங்கள் எனது வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் இடம்பெறவில்லை என்றால் சரியல்ல. நான் நடுப்பண்னையை சேர்ந்தவர் என்ற முறையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடன் சேர்ந்து 2 முதல் 5 வாதிகளும் நடுப்பண்னையை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். வாதிகளை தவிர நடுப்பண்னையை சேர்ந்த மற்ற நபர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். அவர்கள் முறையே வையாபுரி, முருகேசன், சரவணன், கே.குமார், சுதாகர், சிவலிங்கம் மற்றும் சிலர் உள்ளார்கள்.

3. இவ்வழக்கின் வாதிகளுக்கு உள்ள உரிமை மேற்படி நபர்களுக்கும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர்கள் இவ்வழக்கில் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். வாதிகள் மேற்படி நடுப்பண்னை சேர்ந்த முக்கிய நபர்கள் என்பதால் மற்ற நபர்களுக்காகவும் சேர்த்து இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி விவரத்தை வாக்குமூலத்திலும், வழக்குரையிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாதிகள் நடுப்பண்ணையின் முக்கிய நபர்கள் இல்லை என்றும், வாதிகளுக்கு என்ன உரிமை உள்ளதோ அதே உரிமை தான் நடுப்பண்னையை சேர்ந்த மற்ற நபர்களுக்கும் உள்ளது என்றும், அவர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைநிற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

4. 1 முதல் 4 பிரதிவாதிகள் பெரிய பண்னையை சேர்ந்தவர்கள். 1 முதல் 4 பிரதிவாதிகளை தவிர வேறு நபர்களும் பெரிய பண்னையில் உள்ளனர் என்றால் சரிதான். அவர்கள் முறையே வீராச்சாமி, சண்முக சுந்தரம்,

முனியப்பன், செந்தில்குமார் மற்றும் பலர் உள்ளனர். மேற்படி பெரிய பண்ணை சேர்ந்த இதர நபர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு உள்ள உரிமை தான் பெரிய பண்ணையைச் சேர்ந்த மற்ற நபர்களுக்கும் உள்ளது என்றால் சரிதான். அவர்களை இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு நிலைநிற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

5. பிரச்சனை செய்தவர்களை மட்டும் தரப்பினர்களாக சேர்த்துள்ளோம். மேற்படி விவரத்தை வழக்குரையிலோ, வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. 5 முதல் 8 பிரதிவாதிகள் சின்ன பண்ணையைச் சேர்ந்தவர்கள். 5 முதல் 8 பிரதிவாதிகளை தவிர வேறு நபர்களும் சின்ன பண்ணையில் உள்ளனர் என்றால் சரிதான். அவர்கள் முறையே தங்கவேல், அண்ணாத்துரை, வீராச்சாமி, பாலசுப்பிரமணியன், மணி, மற்றும் பலர் உள்ளனர். மேற்படி சின்ன பண்ணை சேர்ந்த இதர நபர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

6. 5 முதல் 8 பிரதிவாதிகளுக்கு உள்ள உரிமை தான் சின்ன பண்ணையைச் சேர்ந்த மற்ற நபர்களுக்கும் உள்ளது என்றால் சரிதான். அவர்களை இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு நிலைநிற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தேவையான அவசிய தரப்பினர்களை சேர்க்காததால் இவ்வழக்கு நிலைநிற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கு பிரதிநிதித்துவ வழக்காக தாக்கால் செய்யாத காரணத்தினாலும் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் பரிகாரம் வழங்கினால் தரப்பினர்களாக சேர்க்கப்படாத நபர்களுக்கு இவ்வழக்கு தீர்ப்பு பாதிப்பு ஏற்படுத்தும் என்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

7. தாவா கோவில் புறம்போக்கு நிலத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி இடத்தை பொறுத்த வரை எங்களுக்கோ, வேறு நபர்களுக்கோ எந்த உரிமையையும் இல்லை என்றால் சரியல்ல. 1983ம் வருடத்திலிருந்து எனது தந்தை ராசு பெயரில் மேற்படி கோவிலுக்கு செலுத்தப்பட்ட மின் இணைப்பு இரசீதுகள் உள்ளது. எனது தந்தை இறந்து எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் சுமார் 25 வருடங்கள் இருக்கும். எனது தந்தை 2000ம் ஆண்டு இறந்தார். வா.சா–ஆ.8 ஆவணமானது எனது தந்தை இறந்த பிறகு பெறப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அவரது இறப்பிற்கு முன்பே வாங்கப்பட்டது.

8. வா.சா.ஆ.8 ஆவணத்தில் 29.01.2021, 20.07.2020,19.11.2015,17.03.2020 ஆகிய தேதிகள் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி தேதிகளுக்கு முன்பே எனது தந்தை இறந்து விட்டார் என்றால்

சரிதான். எனது தந்தைக்கு யார் யார் வாரிசு என்றால் லட்சுமி, குமார், சித்ரா, கதிர்வேல் ஆகியோர் வாரிசுகள் ஆகும். எனது தந்தை இறந்த பிறகு வாரிசு அடிப்படையில் எங்கள் பெயரில் மின் இணைப்பு ஏற்பட்டிருக்க வேண்டும் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் சொத்துக்கள் 2021ம் வரை பாகப்பிரிவினை செய்யப்படாமல் இருந்து வந்தது. வா.சா.ஆ.8 மின் இணைப்பு இரசீதுகள் எனது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் இரசீதுகள் என்றால் சரிதான். எனது குடும்ப நபர்களை இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

9. அவர்களின் சம்மதத்துடன் தான் இவ்வழக்கை தாக்கல் செய்தேன். மேற்படி விவரத்தை வாக்குமூலத்திலோ, வழக்குரையிலோ சொல்ல வில்லை என்றும், தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா–ஆ.10 ஆவணமானது வா.சா–ஆ.8 இரசீதுகளுக்கான மின் இணைப்பு அட்டை என்றால் சரிதான். மேற்படி மின் கட்டணம் செலுத்தப்பட்ட சொத்துக்கள் எனது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், அதற்கும் தாவா கோவிலுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. 1979ம் ஆண்டு நடுப்பண்ணையைச் சேர்ந்தவர்களால் தாவா கோவிலானது கட்டப்பட்டது. அதற்கான மின் இணைப்பு எனது தந்தையின் பெயரில் வாங்கப்பட்டது. மேற்படி விவரமானது எனது வாக்குமூலத்லோ, வழக்குரையிலோ அல்லது வா.சா.1 சாட்சியத்திலோ சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

10. பி.சா.ஆ.1 புகைப்படத்தில் காணப்படும் காணப்படும் கல்வெட்டு தாவா கோவில் அமைந்துள்ள இடத்தில் உள்ளது என்றால் சரிதான். நன்கொடை செய்தவர்களின் பெயர்கள் பதித்து கல்வெட்டு அமையப்பெற்றுள்ளது. மேற்படி கல்வெட்டுகளில் உள்ள வி.கனகராஜ் மற்றும் ஏ.வீராச்சாமி ஆகியோர் முறையே பெரிய மற்றும் சின்ன பண்ணையைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் தாவா கோவிலுக்கு நன் கொடை வழங்கியவர்கள் என்றால் சரிதான். தாவா கோவில் அனைத்து பண்ணைகளுக்கும் சமமானது என்றும், அதனால் தான் மேற்படி கல்வெட்டு மற்ற பண்ணையைச் சேர்ந்தவர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளது என்றால் சரியல்ல.

11. தாவா கோவிலை நடுப்பண்ணையை சேர்ந்தவர்கள் பராமரித்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதை காண்பிக்க வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. சீலக்காரியம்மான் மற்றும் குட்டக்காரியம்மன் கோவில்கள் அனைத்து பண்ணைகளுக்கும் பொதுவான கோவில் என்றால் சரிதான். மேற்படி கோவில்கள் எங்கள் மூன்று பண்ணைகளை தவிர வேறு யாருக்கும் பாத்தியம் இல்லை என்றால் சரிதான். அதே போல் தாவா கோவிலும்

மூன்று பண்ணைகளை சேர்ந்தவர்களுக்கும் பொதுவாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மூன்று பண்ணைகளுக்கும் தனித்தனி கோவில் உள்ளது. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களும் இவ்வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

12. இவ்வழக்கில் அரசு அதிகாரிகளை தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தினாலும், தாவா கோவில் புறம்போக்கு நிலத்தில் உள்ளதாலும், எந்தவித பரிகாரமும் கோர எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா கோவிலுக்கு அருகே நடுப்பண்ணையைச் சேர்ந்த இரண்டு குடும்பங்கள் மட்டுமே உள்ளது என்றால் சரிதான். மற்ற குடும்பங்களும் அதே ஊரில் தான் சற்று தள்ளி உள்ளார்கள். தாவா கோவிலை முழுமையாக நாங்கள் அனுபவம் செய்து வருவதை நிரூபிக்காத காரணத்தினால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>9ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

13. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் மூன்று பண்ணைக்கு மூன்று முருகன் கோவில்கள் தனித்தனியாக உள்ளன. அதில் எங்களுக்கு பாத்தியப்பட்ட நடுப்பண்ணை கோவிலில் இடையூறு செய்யப்பட்டதால் இவ்வழக்கை தாக்கல் செய்தேன். இவ்வழக்கில் நான் 1ம் வாதி என்றால் சரிதான். யார் யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பெரிய பண்ணையைச் சேர்ந்த கனகராஜ், செல்வம், அசோகன் மற்றும் சுரேஷ் ஆகியோர் மீதும் மற்றும் சின்ன பண்ணைச் சேர்ந்த சண்முகம், பழனிசாமி, வீரப்பன் மற்றும் முருகன் ஆகியோர் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

14. 9ம் பிரதிவாதியாகிய மாவட்ட ஆட்சி தலைவரை இவ்வழக்கில் எதற்காக தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் தாவா கோவில் புறம்போக்கு இடத்தில் உள்ளது என்பதால் சேர்த்துள்ளேன். 9ம் பிரதிவாதி தரப்பில் எங்களுக்கு பிரச்சனை ஏதும் ஏற்பட்டதா என்றால் இல்லை. தாவா கோவில் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண்.301/2 ல் உள்ளது. கோட்டாட்சியர், வட்டாட்சியர் மற்றும் இந்து சமய அறநிலையத்துறையினரை ஏன் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ள வழக்கு தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்தின் சர்வே எண்ணில் உள்ள அனைத்து நிலமும் அரசுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

15. தாவா கோவில் இந்து அறநிலையத்துறை கட்டுபாட்டில் உள்ளது என்றால் சரியல்ல. நடுப்பண்ணை கட்டுப்பாட்டில் உள்ளது. தாவா கோவிலில் பூசாரி உள்ளாரா என்றால் தற்போது எனது தம்பி கதிர்வேல்

உள்ளார். அவருக்கு அரசாங்கத்தால் நலவாரியம் மூலமாக பூசாரி என்பதால் மாதம் தோறும் ரூ.1000/- தரப்படுகிறது என்றால் சரியல்ல. தாவா கோவில் இந்து சமய அறநிலையத்துறையினரின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது என்றும், அவர்கள் இவ்வழக்கின் அவசிய தரப்பினர்கள் என்றால் சரியல்ல. தாவா கோவில் அனைவருக்கும் சமமான பொது கோவில் என்றால் சரிதான். அனைவரும் வழிபாடு செய்ய வருவார்கள்.

16. ஆனால் நடுப்பண்ணைக்கு பாத்தியப்பட்ட கோவில் ஆகும். தாவா கோவில் தனிப்பட்ட முறையில் யாருக்கும் பாத்தியம் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் அவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.யுகாதிமரியா
**Additional District Munsif,**
**Kulithalai.**